# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2011 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, பஹலகம சிறீசோமரத்தன நாயக்க தேரர் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்

---

*(2011 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 23 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2011, ஓகத்து மாதம் 26 ஆந் தேதிய* ***இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்*** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

***விலை : ரூபா 11.25*** ***தபாற் செலவு : ரூபா 10.00***

**2011 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, பஹலகம சிறீ சோமரத்தன நாயக்க தேரர் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்**

[2011 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 23 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ.ஓ. (கூட்.) 12/2010

**பஹலகம சிறீ சோமரத்தன நாயக்க தேரர் மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்**

“பஹலகம சிறீ சோமரத்தன நாயக்க தேரர் மன்றம்” என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான மன்றமொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக் கொள்ளப்பட்ட விதிகளுக்குகிணங்க அதன் குறிக்கோள்களையும் சொல்லப்பட்ட மன்றத்தோடு தொடர்புபட்ட எல்லாக் கருமங்களையும் பயனுறும் வகையில் நிறைவேற்றிக் கொண்டுநடாத்தும் நோக்கத்துக்காக இதன்முன்னர் உருவாக்கப்பட்டுள்ளதாதலாலும் : முன்னுரை.

சொல்லப்பட்ட மன்றமானது எப்பல்வேறு குறிக்கோள்களுக்காகவும் கருமங்களுக்காவும் உருவாக்கப்பட்டதோ அப்பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் அது இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும், அவ் விண்ணப்பத்தை அனுமதித்தல் உசிதமானதாகவிருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

**1.** இச்சட்டம், 2011 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, பஹலகம சிறீ சோமரத்தன நாயக்க தேரர் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

**2.** இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப்பின்னர் “மன்றம்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) பஹலகம சிறீ சோமரத்தன நாயக்க தேரர் மன்றத்தின் தற்போதைய உறுப்பினர்களாயிருக்கின்றவர்களும் அல்லது இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இதன் பின்னர் சேர்த்துக் கொள்ளப்படுகின்றவர்களுமான அத்தகையோரான அத்தனையாட்களும் (இதனகத்துப்பின்னர் “கூட்டுத்தாப பஹலகம சிறீ சோமரத்தன நாயக்க தேரர் மன்றத்தைக் கூட்டிணைத்தல்.

னம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) "பஹலகம சிறீ சோமரத்தன நாயக்க தேரர் மன்றம்" என்னும் பெயர் மகுடத்தின் கீழ் இடையறாவழியுரிமை கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாக இருத்தல் வேண்டும். அத்துடன் அப்பெயர் கொண்டு அது வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும் பயன்படுத்தவும், அவர்கள் விரும்பியாங்கு அதை மாற்றவும் முழுத்தத்துவமும், அதிகாரமும் கொண்டிருத்தலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.*

**3.** கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும் என இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :-

(அ) தர்ம போதனைகள், கலந்துரையாடல்கள் மற்றும் கருத்தரங்குகளை நடாத்துதல் ;

(ஆ) பௌத்தம் தொடர்பில் புத்தகங்கள், சஞ்சிகைகள், பருவவெளியீடுகள், பத்திரிகைகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களைப் பிரசுரித்தல், வெளியிடுதல் மற்றும் விநியோகித்தல் ;

(இ) பௌத்த கல்வி, மேம்பாடு மற்றும் பரப்புதலுக்கென வாசிப்பு மண்டபங்கள், விரிவுரை மண்டபங்கள் மற்றும் கல்விசார் நிறுவனங்களைத் தாபித்தலும் பேணுதலும் ;

(ஈ) பௌத்த கலாசாரம் மற்றும் ஒழுக்க அபிவிருத்தியின் பேணுதலுக்கென செயற்பாடுகளை ஒழுங்கமைத்தலும் நடாத்துதலும் ;

(உ) பௌத்த நம்பிக்கைப் பற்றாளர்களின் வாழ்க்கை வழியை மேம்படுத்த நடவடிக்கை எடுத்தல் ;

(ஊ) தேசிய பௌத்த வழக்காறுகளை மேம்படுத்துதலும் பௌத்த நம்பிக்கைப் பற்றாளரின் ஆன்மீக மற்றும் சமூக பெறுமானங்களை மேம்படுத்துதலும் ;

(எ) சமூக மற்றும் பொருளாதார கஷ்டங்களுக்கு முகங் கொடுக்க பௌத்த நம்பிக்கைப் பற்றாளர்களின் இளம் சந்ததியினருக்கு உதவுதல் ;

(ஏ) பௌத்த கோட்பாடுகளுக்கிணங்க சமூக சேவைச் செயற் பாடுகளை நடாத்துதலும் அத்தகைய, செற்பாடுகளில் ஈடுபடுவதற்கு பௌத்த நம்பிக்கைப் பற்றாளர்களைத் தூண்டுதலும் ; அத்துடன்

(ஐ) பௌத்த நம்பிக்கைப் பற்றாளர்களுக்கென கல்விசார் மற்றும் சமூக செயற்பாடுகளுக்கென நிறுவனங்களைத் தாபித்தலும் பேணுதலும்.

*கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.*

**4.** இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய, கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் எதனையேனும் மேம்படுத்துவதற்கு அல்லது முன்னெடுத்துச் செல்வதற்குத் தேவையான அத்தகைய எல்லாச் செயல்களையும் கருமங்களையும், காரியங்களையும் செய்யவும், புரியவும், நிறைவேற்றவும் கூட்டுத்தாபனம் தத்துவமுடையதாதல் வேண்டும். இத்தத்துவத்துள் வங்கிக் கணக்குளைத் தொடங்குதல், செயற்படுத்தல், முடிவுறுத்தல் என்பவற்றுக்கும், பிணைப் பொறுப்புடன் அல்லது பிணைப்பொறுப்பின்றி பணங்களைக் கடனெடுக்கவும் சேகரிக்கவும், இலங்கையிலும் அல்லது இலங்கைக்கு வெளியேயும் உள்ளவர்களிடமிருந்து மானியக் கொடைகளையும் நன்கொடைகளையும் பெறுவதற்கும் அல்லது சேகரிப்பதற்கும் அதன் நிதிகளை முதலீடு செய்வதற்கும், கூட்டுத் தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்வதற்குத் தேவையான ஆளணியினரை வேலையிலீடுபடுத்தல், வேலைக் கமர்த்தல், வேலையிலிருந்து நீக்குதல் என்பவற்றுக்குமான தத்துவமும் அடங்கும்.

*கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.*

**5.** (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள் 6 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்படும் கூட்டுத்தாபன விதிகளுக்கு அமைய பணிப்பாளர் நாயகம், கௌரவ செயலாளர், கௌரவ பொருளாளர் ஆகியோரையும் அவ்விதிகளில் ஏற்பாடு செய்யப்படக்கூடியவாறும்

அதற்கிணங்கவும் தெரிவு செய்யப்பட்ட வேறு ஆறு பேருக்குக் குறையாத எண்ணிக்கையானோரையும் கொண்ட முகாமைக் குழுவொன்றின் மூலம் நிர்வகிக்கப்படுதல் வேண்டும்.

(2) மன்றத்தின் தாபக உறுப்பினரான கௌரவ பஹலகம சிறீ சோமரத்தன நாயக்க தேரர் முகாமைக்குழுவின் ஆயுட்காலத் தவிசாளரால் வேண்டும். தவிசாளர் கூட்டுத்தாபனத்தின் நிறைவேற்று அலுவலராதல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் முதலாவது முகாமைக்குழு இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு உடனடுத்து நேர்முந்திய நாளன்று பதவி வகிக்கின்ற மன்றத்தின் தற்போதைய முகாமைக் குழுவின் உறுப்பினர்களைக் கொண்டமைந்தாதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

**6**. (1) ஏதேனும் பொதுக்கூட்டத்திலும், சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றிலிரண்டு பங்கினருக்குக் குறையாதோரின் வாக்குப் பெரும்பான்மை கொண்டும், பின்வரும் கருமங்களுள் எல்லாவற்றுக்காகவும் அல்லது எவற்றுக்காக வும் இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளை யாக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :-

(அ) உறுப்பாண்மையை வகைப்படுத்தலும், உறுப்பினர்களைச் சேர்த்தலும், மீளப்பெறுதலும் அல்லது விலக்குதலும் ;

(ஆ) பதவிதாங்குநர்களைத் தேர்ந்தெடுத்தல், பதவி தாங்குநர்கள் பதவிநீங்குதல் அல்லது பதவியை வறிதாக்குதல் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதல் அத்துடன் அவர்களது தத்துவங்களும், நடத்தையும், கடமைகளும் ;

(இ) முகாமைக்குழு உறுப்பினர்களைத் தெரிவுசெய்தலும் அதன் தத்துவங்களும், நடத்தையும், கடமைகளும் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் முகாமைக்குழுவின் அல்லது ஏதேனும் உபகுழுவின் கூட்டங்களில் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கைமுறையும் அக்கூட்டங்களைக் கூட்டுதலும், நடாத்துதலும் அத்தகைய கூட்டங்களின் நேரம், இடங்கள், கூட்டம் பற்றிய அறிவித்தல்களும் நிகழ்ச்சிநிரலும் அவற்றின் கூட்ட நடப்பெண்ணும் அதில் அலுவல்களை கொண்டு நடாத்துதலும் ;

(உ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்களினதும் முகவர்களினதும் சேவையாளர்களினதும் தத்துவங்களும் நடத்தைகளும் கடமைகளும் பணிகளும் ;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிருவகித்தலும், முகாமைசெய்தலும் அதன் நிதிகளின் கட்டுக்காப்பும் அதன் கணக்குகளைப் பேணலும் கணக்காய்வு செய்தலும் ; அத்துடன்

(எ) பொதுவில் கூட்டுத்தாபன அலுவல்களை முகாமை செய்வதற்கும், அதன் குறிக்கோள்களை எய்துவதற்கும்.

(2) கூட்டுத்தாபனத்தால் ஆக்கப்பட்ட ஏதேனும் விதி, அதே போன்ற ஒரு கூட்டத்திலும் (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதி ஒன்றைப்போன்று அதேமுறையிலும் திருத்தப்படலாம், மாற்றப்படலாம் அத்துடன் சேர்க்கப்படலாம் அல்லது இல்லா தொழிக்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபன உறுப்பினர்கள் கூட்டுத்தாபன விதிகளுக்கு அமைந்தோராதல் வேண்டும்.

மன்றத்திடமிருந்து செல்மதியாக உள்ளனவும் அதற்குச் செலுத்தப் படவுள்ளனவுமான கடன்கள்.

**7**. இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று மன்றத்திற்குரிய எல்லாக் கடன்களும் பொறுப்புக்களும் கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்படுதலும் கொடுத்துத் தீர்க்கப் படுதலும் வேண்டுமென்பதுடன், மன்றத்திற்கு வருமதியாகவுள்ள எல்லாக் கடன்களும் செலுத்தப்படற்குரிய ஒப்பப்பணங்கள், உதவுதொகைகள் ஆகியனவும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனம் அசைவுள்ள அசைவற்ற ஆதனத்தை வைத்திருக்கலாம்.*

**8**. ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, கொடை, குத்தகை அல்லது ஏதேனும் இறுதிவிருப்பாவணக் கையளிப்பின் மீது அல்லது வேறுவகையாக அதற்கு உரித்தாகக்கூடிய ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளவும் வைத்திருக்கவும் கூட்டுத்தாபனம் சட்டப்படி ஆற்றலும் தகுதியும் உடையதாதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய ஆதனமெல்லாம், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும் 6 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமையவும், அதனை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறு வகையில் கையாள உள்ள முழுத்தத்துவத்துடன் கூட்டுத்தாபனத்தினால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் நிதியம்.*

**9**. (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், கொடை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு, நன்கொடை, ஒப்பப்பணம், உதவுதொகை கட்டணங்கள் அல்லது மானியக்கொடைகள் என்ற வகையாகப் பெறப்பட்ட எல்லாப் பணங்களும் முகாமைக் குழுவினால் தீர்மானிக்கக்கூடியவாறான ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் வரவிற்கு வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின்கீழ் கூட்டுத்தாபனத்தின் தத்துவங்களையும் கடமைகளையும் மற்றும் பணிகளையும் பிரயோகிப்பதிலும் புரிவதிலும் நிறைவேற்றுவதிலும் கூட்டுத்தாபனத்தால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துதீர்ப்பதற்கு தேவைப்படுத்தப்பட்ட எல்லாப் பணத்தொகைகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

*கணக்குகளும் கணக்காய்வும்.*

**10**. (1) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாக விருத்தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனமானது அதனால் பெறப்பட்ட மற்றும் செலவழிக்கப்பட்ட எல்லாப் பணங்கள் பற்றியும் முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் ஒவ்வொரு ஆண்டிலும் ஆகக் குறைந்தது ஒருதடவையாவது பரீட்சிக்கப்பட்டு கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன் வருமானம் மற்றும்

செலவினக் கணக்குகள் மற்றும் ஐந்தொகையின் சரியாந்தன்மை முகாமைக் குழுவினால் நியமிக்கப்படும் ஒரு தகைமைபெற்ற கணக்காய்வாளரினால் சான்றுறுதிப்படுத்தப்படுதல் வேண்டும்.

(4) இப்பிரிவில், "தகைமைபெற்ற கணக்காய்வாளர்" என்பது,-

(அ) இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப் பினராகவுள்ள அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராக வும், அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்கா ளர் ஒருவராகத்தொழில் புரியவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவுள்ள தனியாள் ஒருவர் ; அல்லது

(ஆ) கணக்காளர் குழுமமொன்றின் வதியும் பங்காளர் ஒவ்வொருவரும் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராக அல்லது சட்டத் தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராகவும் அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவும் இருக்கின்றதான கணக்காளர் குழுமம் ஒன்று,

என்று பொருள்படும்.

கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.

**11**. கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது, முகாமைக் குழுவின் கௌரவ செயலாளரினதும் முகாமைக்குழுவால் உரியமுறையில் அதிகாரமளிக்கப்பட்ட அத்தகைய வேறு ஆளின தும் முன்னிலையிலும் அன்றி எத்தன்மைத்தான சாசனமெதிலும் பொறிக்கப்படுதலாகாது. அவர்கள் தாங்கள் சமுகமளித்தமைக்கு அடையாளமாக சாசனத்தில் தங்கள் பெயர்களை எழுதி ஒப்ப மிடுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஒப்பமிடுதல் எவரே னும் ஆள் சாட்சியொருவராக ஒப்பமிடுவதினின்றும் தனி வேறானதாதலும் வேண்டும்.

*கலைப்பின்மீது எஞ்சியிருக்கும் ஆதனம்.*

**12.** கூட்டுத்தாபனம் கலைக்கப்படுவதன்மீது அதன் எல்லாக் கடன்களையும் பொறுப்புக்களையும் கொடுத்துத்தீர்த்த பின்னர் எத்தமைத்தானதுமான ஏதேனும் ஆதனம் எஞ்சியிருப்பின், அத்தகைய ஆதனம் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுதலாகாது. ஆனால், கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களையொத்த குறிக்கோள்களைக் கொண்டதும் அத்துடன் எந்த வேறு நிறுவனம் அல்லது நிறுவனங்கள் அதன் விதிகளால் அதன் வருமானம் அல்லது ஆதனமானது அதன் அல்லது அவற்றின் உறுப்பினர்களிடையே பகிரப்படுவதைத் தடைசெய்ததோ அல்லது தடைசெய்கின்றனவோ அந்த வேறேதேனும் சில நிறுவனத்திற்கு அல்லது நிறுவனங்களிற்கு கொடுக்கப்படுதல் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டும். அத்தகைய நிறுவனம் அல்லது நிறுவனங்கள் கூட்டுத்தாபனம் கலைக்கப்படும் நேரத்தில் அல்லது கூட்டுத்தாபனம் கலைக்கப் படுவதற்கு உடன்முன்னர் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர் களால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

*குடியரசினதும் மறுபேரினதும் உரிமைகளைப் பேணுதல்.*

**13.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும், குடியரசின் உரிமை களையேனும் அல்லது ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக் கப்பட்ட குழுவின் உரிமைகளையேனும் பங்கப்படுத்துதலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**14.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*